புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2056 • ஜனவரி 23, 2025 • புரட்சி 25 • முழக்கம் 02 • விலை ரூ.3.00

## பெரியார் கொள்கைகள் வேகமாகப் பரவுகிறது!

# சீமான் வீட்டை முற்றுகையிட்ட பெரியாரிய உணர்வாளர்கள்



பெரியார் குறித்து நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தொடர்ச்சியாக பல்வேறு அவதூறுகளைப் பரப்பி வருகிறார். பெரியார் குறித்து அவர் வைக்கும் விமர்சனங்களுக்கு ஆதாரம் கேட்டால், அவரின் சங்கி நண்பர்களான அண்ணாமலையும், ஹெச். ராஜாவும், தமிழிசை சௌந்தரராஜனும், துக்ளக் குருமூர்த்தி போன்ற ஆர்.எஸ். எஸ் பார்ப்பனர்களும் ஆதாரத்தைத் தருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் இதுவரை சீமானும் ஆதாரத்தைத் தரவில்லை, அவருடைய சங்கி நண்பர்களும் ஆதாரத்தைத் தரவில்லை. சீமானின் இத்தகைய அவதூறுப் பேச்சு பெரியாரிய உணர்வாளர்கள் மத்தியிலும், பொதுமக்களிடத்திலும் பெரும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய அவதூறுப் பேச்சுக்களை சீமான் நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று பல்வேறு தரப்பில் இருந்தும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் சீமானோ மீண்டும் மீண்டும் சொன்ன பொய்யையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார். இதனால் சனவரி 22-ஆம் தேதி பனையூரில் உள்ள சீமான் வீட்டை முற்றுகையிடப்போவதாக ‘பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு’ அறிவித்திருந்தது. சீமானின் அருவருப்புப் பேச்சுகளால் ஆத்திரமடைந்த பெரியாரியத் தொண்டர்கள் தமிழ்நாடு முழுவதிலும், பல்வேறு மாவட்டங்களில் இருந்து தலைநகர் சென்னை நோக்கித் திரண்டனர். அமைப்புசாரா பெரியாரியப் பற்றாளர்களும், பொதுமக்களும் சீமானுக்கு எதிரான இந்த போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டுமென்று உணர்வோடு சென்னையில் குவிந்தனர்.

காவல்துறையின் கணிப்புகளை விஞ்சும் வண்ணம் திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், மே 17, தமிழ்ப்புலிகள் கட்சி, ஆதித்தமிழர் பேரவை, ஆதித்தமிழர் கட்சி, திராவிடர் தமிழர் கட்சி, தமிழக ஜனநாயக கட்சி, காஞ்சி மக்கள் மன்றம் உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட அமைப்புகளைச் சேர்ந்த ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுக்க பனையூருக்கு வந்தனர். சீமான் வீட்டுக்குப் பலத்த காவல்துறை பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. சீமான் வீட்டை முற்றுகையிட முயன்றவர்களை, சற்று தொலைவுக்கு முன்பே காவல்துறை தடுத்துவிட்டது. ஆனால் பெரும் எண்ணிக்கையில் திரண்டவர்களை கட்டுப்படுத்த முடியாமல் காவல்துறை திணறியது.

எல்லோரையும் கைது செய்து எத்தனை மண்டபங்களில் தடுப்புக்காவலில் வைப்பது என்றே தெரியாமல் திக்குமுக்காடினர். எல்லோரையும் கைது செய்து முடிக்கவே நண்பகலுக்கு மேலாகிவிட்டது. தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையே சுமார் மூவாயிரமாக இருந்ததால், திடீரென அவர்களுக்கான மதிய உணவைத் தயார் செய்து கொடுக்கவே காவல்துறை தடுமாறியது.

### கூடாரம் கலைகிறது!

ஆனால் பெரியார் குறித்து அவதூறான விமர்சனங்களை வைக்கும் சீமான் கட்சியின் கூடாரம் வெகு விரைவாக கலைந்து கொண்டிருக்கிறது. அன்றாடச் செய்திகளில் விளையாட்டு செய்திகள், வானிலை செய்திகள் இடம் பெறுவது போல நாம் தமிழர் கட்சியில் இருந்து இன்று விலகியவர்கள் பட்டியல் என ஊடகங்களில் தினம்தோறும் வந்து கொண்டிருக்கிறது. பெரியார் குறித்து பொய்யான விமர்சனங்களை சீமான் வைத்த பின்னர், அந்த கூடாரம் ஒட்டுமொத்தமாகக் கலைந்து கொண்டிருக்கிறது.

குறிப்பாக சீமானின் இந்த பேச்சைக் கண்டித்து அக்கட்சியின் கடலூர் கிழக்கு மாவட்டத் தலைவர் மகாதேவன், சேலம்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### வீட்டுக்குள் பதுங்கிய சீமான்!

ஆர்ப்பாட்டம் நடைபெறும் வரை காவல்துறை பாதுகாப்போடு சீமான் வீட்டுக்குள் பதுங்கிக் கொண்டிருந்தார். ஆர்ப்பாட்டக்காரர்களைக் காவல்துறை கைது செய்து முடித்தவுடன், வெளியே வந்து ஊடகங்களுக்கு வீராவேசமாக பேட்டி அளித்த அவர், ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏன் வீட்டை நெருங்கவில்லை என்று கேள்வி எழுப்பினார். “காவல்துறை பாதுகாப்பு எனக்கு வேண்டாம், ஆர்ப்பாட்டக்காரர்களை அனுமதியுங்கள்” என முன்பே சொல்ல சீமானுக்கு தைரியம் இல்லாமல் போனது ஏன் என அந்த பேட்டியைப் பார்த்து பொதுமக்களே கேள்வி எழுப்புகின்றனர்.

மீண்டும் மீண்டும் பெரியார் குறித்து சீமான் வைக்கும் விமர்சனங்களால் பெரியாரின் புகழ் மென்மேலும் பரவிக் கொண்டிருக்கிறது. எதிரிகள்தான் தனக்கு விளம்பரமே என வாழ்ந்த காலத்திலேயே கூறியவர் பெரியார். இப்போது மறைந்து அரை நூற்றாண்டுக்கு மேலாகியும் அந்த கூற்று நிரூபணமாகிக்கொண்டிருக்கிறது. சீமானின் விமர்சனங்களால் பெரியார் தமிழ் குறித்தும், பெண்கள் குறித்தும் உண்மையில் என்ன கூறினார் என்று தேடித்தேடி இளைஞர்கள் படிக்கிற ஒரு சூழல் உருவாகியிருக்கிறது. இதனால் இதுவரை சென்று சேராத தரப்பினரிடமும் பெரியாரின் சுயமரியாதை, சமூக நீதி, பெண்ணிய உரிமை சார்ந்த சிந்தனைகள் வேகமாக சென்றடைந்து கொண்டிருக்கின்றன.

### பெருந்திரளாகப் பங்கேற்ற கழகம்

இந்த ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில், புதுச்சேரி மாநிலத் தலைவர் லோகு அய்யப்பன், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், ஒருங்கிணைந்த சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி, தென்சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், வடசென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன், தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், வட சென்னை மாவட்ட அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி, தென் சென்னை மாவட்ட துணைச் செயலாளர் இராவணன், சென்னை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அருண், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி கிருஷ்ணன், காஞ்சிபுரம் மாவட்ட அமைப்பாளர் ரவிபாரதி, விழுப்புரம் மாவட்டத் தலைவர் பெரியார் சாக்ரடீஸ், கடலூர் சிவா, பெங்களூரு சித்தார்த்தன், திண்டுக்கல் மாக்சிம் கார்கி உட்பட சென்னை, திருச்சி, சேலம், தருமபுரி, காஞ்சிபுரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

நீலாங்கரை பேருந்து நிறுத்தத்தில் தொடங்கி சீமான் வீடு அருகில் உள்ள ரிலையன்ஸ் மார்க்கெட் வரை கழகத் தோழர்கள் பேரணியாகச் சென்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். கழகத் தோழர்கள் கையில் ஏந்தி வந்த பதாகைகளும், விண்ணதிர எழுப்பிய முழக்கங்களும் தனிக்கவனம் ஈர்த்தன. சீமான் உருவ பொம்மையை எரித்தும் கழகத் தோழர்கள் எதிர்ப்புகளை வெளிப்படுத்தினர்.

## தலையங்கம்

# இந்துக்களே விழித்துக்கொள்ளுங்கள்!

‘இந்துக்களே ஒன்றுபடுங்கள்’ என்ற பா.ஜ.க.-வின் பெரும்பான்மைவாதம் வெறும் வாக்கு அரசியலுக்கான உத்தி என்பதை வருணாசிரமவாதிகள் மீண்டும் மீண்டும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். “பார்ப்பனர்களே ஒன்றுபடுங்கள், பார்ப்பனர்களே உங்கள் மேலாதிக்கத்தை விட்டுவிடாதீர்கள்” என்பதுதான் அவர்களின் உண்மையான முழக்கம். அந்த முழக்கத்தைக் கர்நாடாகாவிற்கு சென்று எதிரொலித்திருக்கிறார் காஞ்சி காமகோடி பீடத்தின் விஜயேந்திர சரஸ்வதி.

சனவரி 19-ஆம் தேதி கர்நாடகாவில் நடைபெற்ற ‘அகில கர்நாடகா பிராமண மகாசபா’ நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசியிருக்கும் இவர், “சனாதன தர்மத்தைப் பரப்புவதில் முக்கியப் பங்காற்றுவது பார்ப்பனர்களே. இந்திய விடுதலைக்குப் பிறகு வேத தர்மத்தைப் பரப்ப பார்ப்பனர்கள் நெருக்கடியை எதிர்கொள்கிறார்கள். வைதீக மதம் நிலையாக இருக்கவும், பாரதத்தின் ஆன்மீக மற்றும் கலாசார பெருமைகளைப் பாதுகாக்கவும் பார்ப்பனியத்தின் இருப்பு அவசியம். நிர்வாக மட்டத்தில் பார்ப்பனர்களை அதீத எண்ணிக்கையில் இடம்பெற வேண்டும். அப்போதுதான் சனதான தர்மத்தைப் பரப்ப முடியும். பார்ப்பன சமூகம் ஒற்றுமையாக இருக்க வேண்டும்” என்று பேசியிருக்கிறார்.

அவரது பேச்சில் ஒரு இடத்தில் கூட, சாதி ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து இந்துக்கள் ஒன்றுபட வேண்டும் என்றோ, அனைத்து இந்துக்களின் நலன்கள் குறித்தோ குறிப்பிடவில்லை. பார்ப்பனர்கள் பொருளாதாரத்தில் மேம்பட்டால் போதும், பார்ப்பனர்கள் அதிகார மையத்தை நிரப்பினால் போதும், பார்ப்பனர்களின் வயிறு நிரம்பினால் போதும் என்று, அவருடைய கவலையெல்லாம் பார்ப்பனர்களைப் பற்றித்தான் இருந்தது. டெங்கு, கொசு, மலேரியாவை போல சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டுமென்று உதயநிதி பேசியபோது, சனாதன தர்மம் என்பது இந்துக்களின் வாழ்வியல் முறை, அதை ஒழிப்போம் என்று சொல்வதா? என சங்கிகள் கூச்சலிட்டனர். ஆனால் இப்போது சனாதன தர்மமும், பார்ப்பனியமும் வேறு வேறல்ல என்பதை, விஜயேந்திர சரஸ்வதி தெள்ளத்தெளிவாக புரிய வைத்துவிட்டார்.

வேத மதத்தை ஏன் பாதுகாக்க வேண்டுமென்று விஜயேந்திர சரஸ்வதி துடிக்கிறார்? “அவனவன் வருணாசிரமங்களுக்குத் தக்கதாக தரும சாஸ்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கிற நித்திய கருமங்களை நாள்தோறும் சோம்பல் இல்லாமல் செய்ய வேண்டும். அவைகளைச் செய்பவனே மேலான கதியை அடைகிறான்” என்கிறது மனு சாஸ்திரம். அப்படியானால் வேதங்களும் தரும சாஸ்திரங்களுக்கும் எல்லோருக்கும் சொல்லியிருக்கிற அந்த நித்திய கருமங்கள் என்ன? ஓதுதல், ஓதுவித்தல் பணியை பிராமணர்கள் செய்ய வேண்டும், சத்திரியர்கள் போர் புரிய வேண்டும், வைசியர்கள் வணிகம் செய்ய வேண்டும். மேலே இருக்கும் மூன்று வர்ணத்தாருக்கும் அடிமை வேலைகள் செய்வது சூத்திரர்களின் கடமை என்பதுதான் வேதங்கள் விதித்திருக்கும் கட்டளை.

இன்றைய நவீன உலகில் கல்வியும், அறிவியல் முறையிலான வேலைவாய்ப்புகளும் இன்னாருக்குத்தான் இன்ன பணி என்ற சமூக கெடுபிடிகளைத் தகர்த்துவிட்டது. ஓதுதலும், ஓதுவித்தலும் மட்டும்தான் பார்ப்பனர்கள் பணி, அதைத்தவிர வேறு எந்த வேலையும் செய்யக்கூடாது என்றால் அதை பார்ப்பன சமூகமே ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அவர்களும் கடல் கடந்து பல வேலைகளுக்கு வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டனர். சில பார்ப்பனர்கள் மாட்டிறைச்சி ஏற்றுமதி செய்யும் தொழிலில் கூட ஈடுபடுகிறார்கள். தனியார் மென்பொருள் நிறுவனங்களில் உயர் பதவிகளை நிரப்பியிருக்கிறார்கள்.

அறிவுசார்ந்த, அறிவியல் சார்ந்த வேறு வேலைகளுக்குச் செல்ல இயலாத பார்ப்பனர்களின் நலனுக்காக ஆலயங்களை அவர்களின் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, வேறு எவரும் புகுந்துவிடாத வண்ணம் ஆகமங்களை ஏற்பாடு செய்துகொண்டனர். அது ஒருபக்கம் இருந்தாலும், வேதங்கள் விதித்த ஜாதிக்கொரு கடமை என்ற கட்டளைகளை இனி பார்ப்பனர்களே முழுமையாகப் பின்பற்ற இயலாது என்றபோதிலும், சடங்கு- சம்பிரதாயங்களின் ஊடாக ஜாதிய அமைப்பு முறையை நிலைநிறுத்திக்கொண்டிருக்கிறார்கள். சடங்கு- சம்பிரதாயங்களையும் ஒழித்துவிட்டால், ஜாதி அமைப்பு உடைந்துவிடும், பார்ப்பனிய மேலாதிக்கத்தை இழந்துவிடுவோம் என்ற அச்சத்தில்தான், வேத கலாச்சாரத்தைப் பாதுகாக்க வேண்டும், ஆன்மீகத்தைப் பாதுகாக்க வேண்டும் அதற்காக ஒன்றுபடுங்கள் பார்ப்பனர்களே என முழங்கியிருக்கிறார் விஜயேந்திர சரஸ்வதி.

ஆனால் பார்ப்பனர்களிடத்தில் ஒற்றுமை இல்லாமல் அச்சமூகம் பெரும் ஒடுக்குமுறைக்கு உள்ளாவதைப் போலவும், அதிகார மையங்களில் போதிய பிரநிதித்துவம் பெறாத விளிம்பு நிலை சமூகம் போலவும் பொதுப்புத்தியில் பதிய வைக்கிற விஜயேந்திர சரஸ்வதியின் பேச்சு ஆபத்தானது. ஏற்கெனவே அனைத்து அதிகார மையங்களையும் பார்ப்பனர்களே ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள்.

குடியரசுத் தலைவர் செயலகத்தின் 49 பதவிகளில் 39 பேர் பார்ப்பனர்கள். ஒன்றிய அமைச்சரவைச் செயலாளர்கள் 20 பேரில் 17 பேர் பார்ப்பனர்கள். பிரதமர் அலுவலகத்தின் 35 உயரிய பதவிகளில் 31 பேர் பார்ப்பனர்கள். ஆளுநர்கள் மற்றும் துணை நிலை ஆளுநர்கள் 27 பேரில் 25 பேர் பார்ப்பனர்கள். வெளிநாட்டுக்கான தூதர்கள் 140 பேரும் பார்ப்பனர்கள் மட்டுமே. உச்சநீதிமன்ற நீதிபதிகளில் 23 பேர் பார்ப்பனர்கள். நாடு முழுவதும் உள்ள அய்.ஏ.எஸ். அதிகாரிகளில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்ப்பனர்கள். ஒன்றிய அரசின் அனைத்து அமைச்சகங்களிலும் அதிக எண்ணிக்கையில் இருப்பவர்கள் பார்ப்பனர்கள்.

ஜாதி அமைப்பை கட்டிக்காப்பதுதான் பார்ப்பனர்கள் இத்தகைய மேலாதிக்கத்தில் அமர்த்தி வைத்திருக்கிறது. அதற்காகத்தான் இந்த கட்டமைப்பைப் பாதுகாக்க வேண்டுமென்று துடிக்கிறார் விஜயேந்திர சரஸ்வதி என்பதை இந்துக்கள் புரிந்துகொள்ள வேண்டும். வருணாசிரம தர்மம் சொல்லும் ஜாதிய வாழ்வியலை விட்டொழித்து, சமத்துவ வாழ்வியலை முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் பார்ப்பனிய மேலாதிக்கம் தகரும். சிந்திப்பீர்..

# சென்னை - திருப்பூரில் பொங்கல் விழா




*சென்னை : திருவல்லிக்கேணி பகுதி சார்பில் 25ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் விழா 12.01.2025 அன்று இராயப்பேட்டையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி தலைமை தாங்கினார். கோபிநாத் வரவேற்புரை நிகழ்த்தினார். இராஜேசு - தமிழ்ச்செல்வன் முன்னிலை வகித்தனர்.*

*விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் சரசுவதி, கழகத் தலைமை நிலையச் தபசி குமரன், தி.மு.க. மாவட்டத் துணைச் செயலாளர் ஆர். என்.துரை, மாமன்ற உறுப்பினர் கமலா செழியன், வட்டச் செயலாளர் க.வே.மோகன், வி.சி.க. எஸ்.எஸ்.பிரபு உள்ளிட்டோர் கலந்து கொண்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர்.*

*அதனைத் தொடர்ந்து அதிர்வு கலைக்குழுவின் தமிழர் மண் சார்ந்த கலை நிகழ்ச்சிகள், பகுதி மாணவிகளின் மாறுவேடப் போட்டி, பட்டுக்கோட்டை அபிராமியின் கிராமியப் பாடல்கள் மற்றும் பூவையார், கானா பிரபா, மெர்லின் ஆகியோரின் கானா இசை நிகழ்ச்சி நடைபெற்றது.*

*2024ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசின் தந்தை பெரியார் விருது பெற்ற கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனை சிறப்பிக்கும் விதமாக திருவல்லிக்கேணி பகுதி சார்பில் நினைவுப் பரிசினை வழங்கப்பட்டது. மேலும் அவரது 58 ஆண்டுகால பெரியாரியப் பணிகள் நினைவு கூறும் விதமாக ஆவணப் படம் ஒன்றும் விழா மேடையில் திரையிடப்பட்டது. இது கழகத் தோழர்கள் மத்தியில் உணர்வலைகளை ஏற்படுத்தியது.*

*பத்ரி நாராயணன், சமூக விரோதிகளிடம் இருந்து பகுதி இளைஞர்களை காத்தப் போராளி. அவரால் தொடங்கப்பட்ட பொங்கல் விழா தற்போது 25ஆம் ஆண்டை தொட்டிருப்பதை முன்னிட்டு அவர் இந்த சமுதாயத்திற்கு ஆற்றியப் பணிகளை இன்றைய தலைமுறைக்கு வெளிச்சமிட்டு காட்டும் ஒரு ஆவணப் படம் திரையிடப்பட்டது.*

*நிறைவாக வீரமுத்து நன்றி கூறினார்.*

**திருப்பூர் :** *திருப்பூர் மாநகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தை-1 தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் விழா 12.01.2025 அன்று திருப்பூர் மாஸ்கோ நகர், பெரியார் திடலில் முழுநாள் விழாவாக நடைபெற்றன.*

*விழாவிற்கு மாநகரச் செயலாளர் மாதவன் தலைமை தாங்கினார். அஸ்விதா, வசந்தி, கார்த்திகா, ஸ்ரீஜா, முத்துலட்சுமி, கனல்மதி, பிரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநகர அமைப்பாளர் முத்து வரவேற்புரையாற்றினார்.*



*காலை 9 மணிக்கு பொங்கல் வழங்கும் நிகழ்வைக் கழகப் பொருளாளர் துரைசாமி துவக்கி வைத்தார். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக ஆர்.ஏ. சேகர் அ.தி.மு.க, ஆரியாஸ் கண்ணன், சிவானந்தம் ம.தி.மு.க, சிபி இராஜேந்திரன் தி.மு.க, குட்டி அண்ணாச்சி வியாபாரிகள் முன்னேற்ற சங்கம், க.பூமிநாதன், இரா.கதிரேசன். தி.மு.க ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*விளையாட்டுப் போட்டிகளை வணக்கத்திற்குரிய மேயர் தினேஷ்குமார் துவக்கி வைத்தார். தொடர்ந்து மாலை வரை பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.*

*இரவு பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. ஈரோடு கலைத்தாய் கலைக்குழுவினரின் பறை இசை, சிலம்பம், களரி, வாள் வீச்சு உள்ளிட்ட மண் சார்ந்த கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கலை நிகழ்ச்சியை கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி தொடங்கிவைத்து உரையாற்றினார்.*

*இணையதளப் பொறுப்பாளர் பரிமளராசன், மா.செயலாளர் சு.நீதிராசன், மா.அமைப்பாளர் சங்கீதா, மாநகரத் தலைவர் வீ.தனபால், மாநகரத் துணைத் தலைவர் க. மாரிமுத்து, வடக்குப் பகுதி அமைப்பாளர் அய்யப்பன், ராஜசிங்கம், ராஜ்குமார், பிரவீணா, நாகராஜ், சூரியா, கதிர்முகிலன் ஆகியோர் விளையாட்டுப் போட்டிகளையும், நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்து நடத்தினர். நவீன மனிதர்கள் அமைப்பைச் சார்ந்த அருண், லெனின், தோழர் அப்துல் காதர், ஆகியோர் பரிசளித்தும், நிகழ்ச்சியைக் குறித்தும், பொங்கல் குறித்தும் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள்.*

*சிறப்பு அழைப்பாளர்களாக கழக வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம.இளங்கோவன், அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, நவீன மனிதர்கள் குழுவின் பாரதி சுப்பராயன், மதிமுக மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கந்தசாமி, தி.க. மாவட்ட தலைவர் யாழ்.ஆறுச்சாமி ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்ச்சிகளை மாவட்டத் தலைவர் முகில் ராசு ஒருங்கிணைத்து நடத்தினார். நிறைவாக தமிழ்நாடு மாணவர் கழக தோழர் கார்த்திகா நன்றி கூறினார்..*

# பார்ப்பனிய புனித பிம்பங்களை உடைத்த அண்ணல் அம்பேத்கரின் புரட்சிகர எழுத்துக்கள்

**24.12.2024 அன்று கோவையில் நடைபெற்ற புரட்சியாளர்கள் அம்பேத்கர் – பெரியார் நினைவுநாள் பொதுக்கூட்டத்தில் தோழர் இனியவன் ஆற்றிய உரை. கடந்த இதழின் தொடர்ச்சி..**

**இனியவன்**

இந்திய அரசியல் களத்தில் ஜாதி குறித்தான விவாதங்கள் அண்ணல் அம்பேத்கருக்கு முன்பாகவே வெகுவாக தொடங்கிவிட்டது. 1917இல் மாண்டேகு - செம்ஸ்போர்ட் குழு உருவாக்கப்பட்டது. முதல் உலகப்போர் முடிவில் பிரிட்டிஷ் இந்தியாவின் அரசு அதிகாரத்துவத்தில் இந்தியர்களுக்கு குறைந்தபட்ச பிரதிநிதித்துவமாவது வழங்கப்பட்ட வேண்டும் என்கிற அடிப்படையில் உருவாக்கப்பட்ட இக்குழுவினை பல்வேறு தரப்பினர் சென்று சந்தித்து தங்கள் கருத்தை முன் வைத்தனர். அதில் மதராஸ் மாகாணத்தின் ‘பஞ்சமர் கல்வி அபிவிருத்தி அபிமான சங்கம்’, ‘மதராஸ் ஆதி திராவிட சங்கம்’, வங்காள மாகாணத்திலிருந்து குரு சந்த் தாக்கூர் உருவாக்கிய அமைப்பு ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இந்த அமைப்புகள் “சமூகத்தில் நீடித்து வரும் ஜாதி அமைப்பு முறையை ஒழிக்காமல் உயர் ஜாதி இந்துக்கள் கையில் அளிக்கப்படும் எவ்விதமான அதிகார பகிர்வு அல்லது அதிகார மாற்றம் மிகவும் அபாயகரமானது” என எதிர்ப்பைப் பதிவு செய்தது. அந்த அளவிற்கு சமூகத்தில் ஜாதியின் தாக்கம் அனைத்து நிலைகளிலும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தி இருந்தது. இந்த நிகழ்விற்கு பின்னரே காங்கிரஸ் கட்சி வர்ண-ஜாதி முறைக்கு எதிராகக் குரல் எழுப்பத் தொடங்கியது. ஆனாலும் கூட தீண்டத்தகாதரிடம் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள காங்கிரஸ் கட்சி எள்ளவும் தயாராக இல்லை.

மேற்கண்ட சமூக அரசியல் சூழலை இணைத்து தான் அம்பேத்கரின் அரசியல் வருகையை யும், அவர் வலியுறுத்திய கருத்துக்களையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## இந்தியாவில் ஜாதிகள் அம்பேத்காரின் ஆய்வு

1916 இல் அண்ணல் அம்பேத்கர் எழுதிய இந்தியாவில் ஜாதிகள் என்கிற நூல் இந்தியாவின் பூர்வகுடிகள், வர்ண அமைப்புமுறை, ஜாதி உருவாக்கம் ஆகியவற்றை ஆதாரபூர்வமாக விளக்கத்துடன் அகமண முறை திருமணங்கள் ஜாதியைப் பாதுகாத்து வருவதையும், பெண்களை அடிமைகளாக வைத்திட வழிவகை செய்யும் ஆணாதிக்க சமூகத்தின் வழிவகை தான் ஜாதி அமைப்பு முறை எனவும் அறுதியிட்டு கூறியுள்ளார். பெண்ணடிமை நீடிக்க வர்ணாசிரம மதம், ஜாதி அமைப்பு அதன் பின்னணியில் நிலை நிறுத்தப்பட்டுள்ள சமூக அமைப்பு முறை ஆகியவையே முதன்மை காரணியாக உள்ளன என இந்தியாவில் இதற்கு முன்பாக இவ்வளவு வெளிப்படையாக எழுதியவர் எவரும் இல்லை. பெண்கள் மீது நிகழ்த்தப்படும் குடும்ப ஒடுக்குமுறை, சமூக ஒடுக்குமுறை ஆகியவற்றின் பின்னால் நிற்கும் வர்ணாசிரம – பார்ப்பனவாத குயுக்தி ஆகியவற்றை முன்வைத்து ஜாதி மறுப்புத் திருமணம் மூலம்தான் குறைந்த பட்ச பெண்ணுரிமையைப் பெற முடியும் என்ற அம்பேத்காரின் வாதம் இன்றளவும் அப்படியே பொருந்திப் போகிறது.

கம்யூனிஸ்ட்களின் பார்வையில் தோழர் எங்கெல்சின் “குடும்பம், தனிசொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்” என்னும் நூலில் பெண்கள் பிரச்சனைக் குறித்த திட்டவட்டமான ஆய்வினைக் காண முடியும். தாய் உரிமையின் இடத்தைத் தந்தை உரிமை எடுத்துக் கொண்டதில் தொடங்கியே பெண் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டாள் என்பதைப் எங்கெல்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

“செல்வம் பெருகப் பெருக ஒரு பக்கம் குடும்பத்தில் பெண்ணைவிட ஆணுக்கு அதிக முக்கியத்துவத்தை அளித்தது. மறுபக்கம் இந்த முக்கியத்துவத்தைப் பயன்படுத்தி ஏற்கனவே இருந்த வாரிசுரிமை முறையை மாற்றி தன் குழந்தைகளுக்கு வாரிசுரிமை என்ற சாதகமான இடம் ஆணுக்கு கிடைக்குமாறு மாற்றியது...இவ்வாறாக தாய் உரிமை வழியிலான குலச் சார்பும், வாரிசுரிமையும் ஒழிக்கப்பட்டு தந்தை உரிமை வழியாக ஆண்குலச் சார்பும், வாரிசுரிமையும் நிலைநாட்டப்பட்டன. தாய் உரிமை தூக்கியெறியப்பட்டதே உலகெங்கிலும் பெண்ணினம் சந்தித்த மாபெரும் தோல்வியாகும். ஆண் வீட்டின் அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டான்; பெண் கீழ்நிலைக்கு ள்ளபட்டு வேலைக்காரியாக உருமாற்றப்பட்டு ஆணின் காம இச்சையை பூர்த்தி செய்யும் அடிமையாக, வெறும் மறுஉற்பத்தி செய்யும் ஒரு கருவியாக மாற்றப்பட்டாள். பெண்ணின் நிலையானது சொத்திற்கும் அவளுக்குமான உறவின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. அதாவது, உற்பத்திச் சாதனங்களின் மீதான உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் பெண்ணின் நிலை தீர்மானிக்கப்படுகிறது”. எங்கெல்ஸ் கூறியுள்ளபடியே வரலாற்றின் வழியே பெண்கள் மீதான சுரண்டலை, அடக்குமுறையை நிலைநிறுத்திட உலகம் முழுவதும் பல்வேறு சமூகங்கள் பல வழிகளை கையாண்டுள்ளன என்பதை புரிந்து கொண்ட நாம் இந்தியாவை பொறுத்தவரை வர்ணாசிரம - ஜாதி அமைப்பு முறை பெண்களை அடிமையாக்கும் முதன்மை கருவியாக செயல்படுவதை விளக்கி அண்ணல் அம்பேத்கர் முன்வைத்த ஆய்வினை ஒப்பீடு செய்து பார்ப்பதே முறையான கம்யூனிஸ்ட் பார்வை ஆகும். அவ்வகையில் பெண்ணுரிமை வென்றெடுக்கும் போராட்டத்தில் அண்ணலின் கருத்துகள் ஆக்கப்பூர்வமானயே.

1919இல் தன் படிப்பை முடித்துவிட்டு அமெரிக்காவில் இருந்து இந்தியா திரும்பிய அண்ணல் அம்பேத்கார் இந்தியாவில் நிலவும் ஜாதி அமைப்பு முறையின் சமூக ஆதிக்கம், உயர் ஜாதியினரின் அரசியல் அதிகாரம், பார்பனியத்தின் உண்மை தன்மை, அவற்றை பாதுகாக்க புனையப்பட்ட வேதங்கள் ஆகியவற்றை தனது எழுத்துகள் மூலம் வெளிச்சத்திற்கு கொண்டுவந்தார். இதனால் அதுவரை வேத, புராண, இதிகாச கடவுள் கதைகள், அதன் அடிப்படையிலான மதம் மற்றும் ஜாதி படிநிலைகள், சனாதானம், பார்ப்பனியம் மீது கட்டப்பட்டிருந்த புனித பிம்பங்கள் வெகுவாக உடையத் தொடங்கின. வெகுஜன மக்களிடையே அம்பேத்கரின் எழுத்துகள் சென்றடைய சற்று கடினமாக இருந்த போதிலும் சமூக, அரசியல் தளத்தில் இருந்த தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் முற்போக்கு பிரிவினரிடையே ஓர் கருத்தியல் புரிதலை உருவாக்க தொடங்கியது. அவர் இயற்கை எய்தும் வரை இப்பணியினை தொய்வுறாது செய்து வந்தார். ஏனென்றால் இந்திய வரலாற்றில் பல்வேறு படையெடுப்புகள், ஆட்சியாளர்கள் மாற்றம், அரச மதம் மாற்றம், காலனி ஆதிக்கம், முதலாளித்துவ தொழில் வளர்ச்சி என பல்வேறு புற சூழல் மாற்றங்கள் நிகழ்ந்த போதும் அக சூழலில் வெகுவான மாற்றங்கள் கேள்விக்குறியாகவே இருந்தது. உழைக்கும் மக்களின் நிலை மாறாத அளவில் ஜாதிய கட்டுமானம் அவர்களை பெரும் இருட்டில் சிக்க வைத்திருந்தது. அரசியல் பொருளாதார மாற்றம் சமூக மாற்றத்திற்கு வித்திடும் என்கிற விதியை கேலி செய்திடும் வகையில் இந்தியாவில் எப்போதும் மனுவாதம் ஆதிக்க சக்தியாகவே கோலோச்சியது. அதை கருத்தில் கொண்டு தன் அந்த அம்பேத்கர் மனித குல விரோதியான மனு வாதத்தை உடைத்தெரியும் வேலையை அறிவு தளத்திலும், செயற்களத்திலும் மேற்கொண்டார்.

அதே 1919-20 காலகட்டத்தில் தான் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் உருவாகத்தற்கான நாற்றங்கால்கள் வேர்விடத் தொடங்கின. 1917 ரஷ்யாவில் புரட்சி நடைபெற்ற பின்னர்தான் அதன் உந்துததால் மார்க்சியம், கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை பல்வேறு நாடுகளில் விரைவாக வேர் விடத்துவங்கியது. 1921இல் அகமதாபாத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தான் முதன் முறையாக கம்யூனிஸ்ட் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன என்கிற போதிலும் 1922இல் இல் காங்கிரஸ் கட்சியின் கயா மாநாட்டில் தான் அந்த கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த கோரிக்கையின் முக்கிய அம்சம் “பூரண சுதந்திரம்”, அனைவரும் சமம், சுரண்டல் அற்ற அரசு அமைப்பு அமைய வேண்டும் என்பதே ஆகும். கயா மாநாட்டில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் பிரதிநிதி என்று பிரகடனப்படுத்திக் கொண்டு தோழர் சிங்காரவேலர் பேசியதே இந்தியாவில் பொதுவெளியில் பொதுவுடைமை கருத்தியலின் முதல் குரலாகும். ஆனால், காங்கிரஸ் கட்சி அந்த முழக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுடன் தொடர்ச்சியாக மதம், ஜாதி அமைப்பு ஆகியவற்றை பாதுகாக்கும் அமைப்பாக காங்கிரஸின் செயல்பாடு இருந்த காரணத்தால் காங்கிரஸ் கட்சியிலிருந்த ஜாதிய மனோபாவத்தைக் கண்டித்து தோழர் சிங்காரவேலர் 1925ஆம் ஆண்டு வெளியேறுகிறார். இங்கே நாம் கவனிக்க வேண்டியது சிங்காரவேலர் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் (1925க்கு பிறகுதான் கம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவில் முழுமையாக உருவாகிறது) செயல்பாட்டாளராக காங்கிரஸ் கட்சிக்குள் பயணித்த நிலையிலும் ஆரம்ப கட்ட கம்யூனிஸ்ட் அமைப்பின் ஆலோசனையின் அடிப்படையிலேயே ஜாதி அமைப்பு முறை மீதான தனது எதிர்ப்பு பதிவு செய்திருக்க முடியும். எனவே 1920-25 கால கட்டத்தில் ஜாதி ஒழிப்பு என்கிற கருத்தாக்கம் ஆரம்பகால கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குள் இருந்த காரணத்தால் தான் தோழர் சிங்காரவேலர் அதனை வலுவாக வலியுறுத்தியுள்ளார். மேலும், அன்றைய மதராஸ் மாகாணத்தில் நடைபெற்று வந்த நீதிக்கட்சியின் ஆட்சி, சமூக வளர்ச்சி மற்றும் பார்ப்பனரல்லாதோர் இயக்கத்தின் தாக்கம் ஆகியவை தோழர் சிங்காரவேலரின் கருத்தியலில் பெரும் விளைவை உண்டாக்கியதன் சூழலில் தான் காங்கிரசில் இருந்து அவர் வெளியேறும் நடவடிக்கை நடந்திருக்கும் என வரலாறு தெரிந்த எவரும் புரிந்து கொள்வார்கள்.

## மகத் – சௌதார் குளம் உரிமை போராட்டம்

1927இல் தான் அண்ணல் அம்பேத்கர் சமூக, அரசியல் கிளர்ச்சிகளில் நேரடியாக கால் பதிக்கிறார். தாழ்த்தப்பட்டோர் மகத் குளத்தில் தண்ணீர் எடுக்கும் உரிமையை உரிமையை நிலைநாட்டிட நடைபெற்ற மாநாடு மற்றும் போராட்டமே அண்ணல் அம்பேத்கார் நேரடியாகப் பங்கேற்ற முதல் மக்கள் திரள் போராட்டம் ஆகும். 1923, 1926ஆம் ஆண்டுகளில் S.K. போலே கொண்டுவந்த தீர்மானத்தின் அடிப்படையில் மகாராஷ்டிராவில் தாழ்த்தப்பட்டோருக்கு பல்வேறு உரிமைகளை பம்பாய் மாகாண அரசு வழங்கியது. அதனை ஒட்டி மகத் நகர்மன்ற சௌதார் குளத்தைப் பயன்படுத்தும் உரிமையைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வழங்கியது. இதனைக் கொண்டாடும் விதமாக 19,20 மார்ச் 1927 இல் மகத் நகரில் மாநாடு நடைபெற்றது. அதில் சிறப்பு அழைப்பாளராக அண்ணல் கலந்து கொண்டார். அந்த மாநாட்டில் மகாராஷ்டிரா மாநிலம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 10,000த்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்றனர். இந்து மதத்தை சார்ந்த முக்கிய தலைவர்கள் பலர் அந்நிகழ்வில் பங்கேற்றனர். தாழ்த்தப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க அனைத்து தரப்பு மக்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என அம்பேத்கர் முன்வைத்த அழைப்பை அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொண்டனர். அப்போது திடீரென எடுக்கப்பட்ட முடிவின் படி மாநாட்டில் பங்கேற்ற அனைவரும் அருகில் இருந்த சௌதார் குளத்தில் சென்று நீர் அருந்த ஊர்வலமாக சென்றனர். அமைதியாக சென்ற அனைவரும் ஏற்கனவே அரசு அறிவித்திருந்த ஆணையின்படி தாழ்த்தப்பட்ட மக்கள் சௌதார் குளத்தில் நீர் எடுக்கும் உரிமையை நிலைநாட்டிய பிறகு மாநாட்டு பந்தலுக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால், இதற்கிடையே மாநாட்டில் பங்கேற்ற அனைவரும் அருகே உள்ள பீரேஸ்வரர் கோயிலுக்குள் நுழைய திட்டமிட்டிருப்பதாக வதந்தி பரவியது. அதனால் ஆத்திரமடைந்த ஜாதி இந்துக்கள் கையில் ஆயுதங்களுடன் மாநாட்டு பந்தலுக்கு திரண்டு வந்து கண்ணீர் பட்ட அனைவரையும் கடுமையாக தாக்கினார்கள். காவல்துறையால் நிலைமையை கட்டுப்படுத்த இயலாமல் போனது. இரண்டு மணிநேர கலவரத்திற்கு பிறகு அமைதித் திரும்பியது. மாநாட்டில் படுகாயம் அடைந்தவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்க முயற்சி மேற்கொண்டு இருந்த வேளையில் தங்களை தாக்கிய ஜாதி இந்துக்களை நாம் மீண்டும் தாக்கலாம் என மாநாட்டில் பங்கேற்றவர்கள் முன்வைத்த கோரிக்கையை அண்ணல் அம்பேத்கர் முற்றாக மறுத்து விட்டார். அப்போதைக்கு அந்தப் பிரச்சனை முடிவுக்கு வந்தது.

அதன்பிறகு தாழ்த்தப்பட்டோர் பயன் படுத்தியதால் குளம் தீட்டாகிவிட்டதாகக் கூறி ஜாதி இந்துக்கள் 108 குடங்களில் கோமியம், மாட்டு சாணி ஆகியவற்றை குளத்திற்கு ஊற்றி குளத்தைப் பயன்படுத்த முடியாத அளவிற்கு முற்றிலுமாக மாசுபடுத்தினர். ஜாதி இந்துக்களுக்கு ஆதரவாக நாட்டின் பல பகுதிகளில் கருத்துக்கள் எழுந்ததை அன்றைய நாளிதழ் தொடர்ச்சியாக வெளியிட்டனர். ஆனால் தாழ்த்தப்பட்டோர் தரப்பின் நியாயத்தை எவரும் வெளியிடவில்லை. ஜாதி இந்துக்களின் நெருக்கடியால் மகத் மாவட்ட நிர்வாகம் 1926ஆம் ஆண்டில் வெளியிட்ட தாழ்த்தப்பட்டோர் உரிமைக்கான ஆணையை 1927, ஆகஸ்ட் 4ஆம் தேதி நேரில் திரும்பப் பெற்றுக்கொண்டது.

**தொடரும்...**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# மேட்டூரில் கலந்துரையாடல் கூட்டம்; கழகத் தலைவர் பங்கேற்பு



சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் 19.01.2025 அன்று மேட்டூர் தாய்த்தமிழ் தொடக்கப்பள்ளியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார், மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல், சேலம் மாவட்டப் பொருளாளர் சம்பத், மேட்டூர் நகரத் தலைவர் மார்ட்டின், மாவட்ட அமைப்பாளர்கள் டைகர் பாலன், நங்கவள்ளி அன்பு, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் சுதா மற்றும் பொறுப்பாளர்களும், தோழர்களும் தங்களது கருத்துகளைப் பதிவு செய்தனர்.

2025ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டங்கள் குறித்தும் இயக்க வளர்ச்சி குறித்தும் தோழர்கள் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

புரட்சிப் பெரியார் முழக்க சந்தா தொகையை வருகிற பிப்ரவரி 15 ஆம் தேதிக்குள் தலைமைக்கு ஒப்படைப்பது குறித்தும், சேலம் மாவட்ட புதிய பொறுப்பாளர்கள் மாற்றம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. அதன்படி, சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நங்கவள்ளி கிருஷ்ணன், நங்கவள்ளி ஒன்றியச் செயலாளராக இராஜேந்திரன், நங்கவள்ளி நகரச் செயலாளராக அ.செ.சந்திரசேகரன் ஆகியோர் கழகத் தலைவரால் நியமிக்கப்பட்டனர்.

மேலும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசும்போது தற்போதைய அரசியல் சூழலில் தந்தை பெரியார் மீதான அவதூறுகளுக்கும் பொய் பிரச்சாரங்களுக்கும் பதிலடி கொடுக்க வேண்டிய தேவை தோழர்களுக்கு இருக்கிறது என்றும், அதை பிரச்சாரமாக மக்களிடத்தில் தெருமுனை பிரச்சாரங்கள் வாயிலாகவோ, கருத்தரங்கங்கள், பொதுக்கூட்டங்கள் வாயிலாகவோ கொண்டு செல்ல வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் மேட்டூர், மேட்டூர் RS, கொளத்தூர், காவலாண்டியூர், உக்கம்பருத்திக்காடு, நங்கவள்ளி, வனவாசி, வெள்ளார், கொங்கணாபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து பொறுப்பாளர்களும், தோழர்களும் கலந்து கொண்டனர்.

இறுதியாக மேட்டூர் நகரச் செயலாளர் குமரப்பா நன்றி கூறினார்.

### கடுவனூர் நாகராஜ் – சுலோச்சனா இல்லத் திறப்பு விழா

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி இல்லத்தை திறந்து வைத்து சிறப்புரை

கள்ளக்குறிச்சி: கடுவனூர் கழகத் தோழர் மு.நாகராஜ் - நா.சுலோச்சனா ஆகியோரின் புதிய இல்லத் திறப்பு விழா 09.01.2025 அன்று கடுவனூர் கிராமத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி புதிய இல்லத்தை திறந்து வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

திராவிடர் செல்வி பகுத்தறிவுப் பாடலை பாடினார் கீதா அவர்கள் வரவேற்புரையாற்றினார். மாவட்ட அமைப்பாளர் சி.சாமிதுரை தலைமை தாங்கினார். தமிழ்நாடு அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர் முருகன், ராமச்சந்திரன், ஆசைத்தம்பி ரிஷிவந்தியம் ஒன்றிய அமைப்பாளர் கார்மேகம், ஒன்றியத் தலைவர் குமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.



மாவட்டத் தலைவர் மதியழகன், மாவட்டத் துணைச் செயலாளர் வெற்றிவேல், விழுப்புரம் மாவட்டத் தலைவர் இளையரசன், கடலூர் மாவட்டத் தலைவர் மதன்குமார், கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் இராமர், மக்கள் அதிகாரம் ராமலிங்கம், கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார் நிறைவாக தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கதிரவன் நன்றி கூறினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பூமாலை, த.பெ.தி.க. கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் பிரபு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் இராமகிருஷ்ணன், தனலட்சுமி பசுமதி, சூர்யா, பஞ்சவர்ணம், கார்சிலா, ஜெயபிரகாஷ், வீரமணி, ஆனந்தன், இலட்சுமணன், தனிமொழி, வல்லரசு, நீதிபதி, இராஜேசு உள்ளிட்ட கழகத் தோழர்கள் - உறவினர்கள் கலந்து கொண்டனர். நிறைவாக அனைவருக்கும் மாட்டிறைச்சி உணவுப் பரிமாறப்பட்டது.

முன்னதாக கழகத் தலைவர், பாக்கம் கிராமத்தில் கழகக் கொடியை ஏற்றி, சிந்தனைப் பலகையை திறந்துவைத்தார்.

### முதல் பக்கத் தொடர்ச்சி

மாநகர் மாவட்டக் கொள்கைப் பரப்புச் செயலாளர் மா.பா. அழகரசன், சேலம் மாநகர் மாவட்ட வணிகர் பாசறை இணைச் செயலாளர் வசந்தகுமார், சேலம் மேற்குத் தொகுதிப் பொறுப்பாளர் பாஸ்கரன், ஓமலூர் தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர் ஸ்டாலின் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகியுள்ளனர்.

மேலும், நாம் தமிழர் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெகதீச பாண்டியன் வெளியிட்ட அறிக்கையில், “திராவிடத்தையும் பெரியாரையும் ஒழிப்பதுதான் எனது நோக்கம் என்று சீமான் பேசியிருப்பது அவருடைய சொந்த கருத்தே ஒழிய, நாம் தமிழரின் ஒட்டு மொத்த கருத்தல்ல. ஆரியம்தான் தமிழனின் முதல் பகை, சீமானின் கருத்து ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., சங் பரிவார் அமைப்புகளுக்கு துணை போகுமே ஒழிய ஒருபோதும் தமிழ் தேசியம் வெல்ல உதவாது” என்று காட்டமாக அறிக்கை வெளியிட்டுள்ளார்.

#### விரட்டியடிக்கும் பொதுமக்கள்

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சியினர் வாக்கு சேகரிக்க சென்ற இடங்களில், பொதுமக்களே அவர்களை விரட்டி அடித்துள்ளனர். பெரியார் குறித்து அவதூறு கருத்துக்களை தெரிவித்துவிட்டு, ஓட்டுக்கேட்க வராதீர்கள் என்று விரட்டியிருக்கிறார்கள். இப்படி குறித்த பெரியார் அவதூறுப் பேச்சுக்களால் பேச்சுக்களால், சீமானின் கட்சி நாளுக்கு நாள் தேய்பிறையாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் பெரியார் கருத்துக்களோ இன்னும் இன்னும் வீரியமாக பரவிக் கொண்டிருக்கிறது. நடந்து முடிந்த சென்னை புத்தகக் காட்சியில் கூட பெரியார், திராவிட இயக்கம் சார்ந்த நூல்களே அதிகம் விற்பனையாகி இருப்பதாக டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேடு செய்தி வெளியிட்டது. 120-க்கும் மேற்பட்ட அரங்குகளில் பெரியார் நூல்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. பெரியார், திராவிட இயக்கம் சார்ந்த நூல்களை மட்டுமே விற்பனை செய்த அரங்குகளின் எண்ணிக்கை பத்தைத் தாண்டும்.

பெரியாரை முட்டி முட்டி மோதி எதிரிகள் வீழ்கிறார்கள். பெரியார் பட்டை தீட்டப்பட்ட வைரமாக நாளுக்கு நாள் மிளிர்கிறார். இதுவரை ஆரிய சனாதனக் கூட்டம் மட்டுமே செய்துவந்த எதிர்ப்புப் பணியை, இப்போது அதே வீரியத்துடன் செய்ய சீமானும், மணியரசனும் கிடைத்திருக்கிறார்கள். இனி இரண்டு மடங்காக பெரியார் கொள்கைகள் மக்களை சென்றடையும். பெரியாரை இன்னும் தீவிரமாக அவர்கள் விமர்சிக்கட்டும். அந்த விமர்சனங்களின் ஊடாக பெரியார் கொள்கைகள் திக்கெட்டும் பரவும்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : January 25, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran